# பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி
# மூன்றாம் பத்து

## ஒன்பதாம் திருமொழி - என்னாதன்
## க்ருஷ்ணாவதார ராமாவதாரங்களின் குண சேஷ்டிதங்களை
## இரண்டு தோழியர் எதிர் எதிராகக் கூறி உந்தி பறத்தல்

** என் நாதன் தேவிக்கு * அன்று இன்பப்பூ ஈயாதாள் *
தன் நாதன் காணவே * தண்பூ மரத்தினை **
வன்னாதப் புள்ளால் * வலியப் பறித்திட்ட *
என் நாதன் வன்மையைப் பாடிப் பற *
எம்பிரான் வன்மையைப் பாடிப் பற 1

என் வில் வலி கண்டு * போவென்று எதிர் வந்தான் *
தன் வில்லினோடும் * தவத்தை எதிர் வாங்கி **
முன் வில் வலித்து * முது பெண்ணுயிர் உண்டான் *
தன் வில்லின் வன்மையைப் பாடிப் பற *
தாசரதி தன்மையைப் படிப் பற 2

உருப்பிணி நங்கையைத் * தேர் ஏற்றிக் கொண்டு *
விருப்புற்று அங்கேக * விரைந்தெதிர் வந்து **
செருக்குற்றான் * வீரம் சிதைய * தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப் பற *
தேவகி சிங்கத்தைப் பாடிப் பற 3

மாற்றுத் தாய் சென்று * வனம் போகே என்றிட *
ஈற்றுத் தாய் பின் தொடர்ந்து * எம்பிரான்! என்றழ *
கூற்றுத் தாய் சொல்லக் * கொடிய வனம் போன *
சீற்றம் இலாதானைப் பாடிப் பற *
சீதை மணாளனைப் பாடிப் பற 4

பஞ்சவர் தூதனாய்ப் * பாரதம் கை செய்து *
நஞ்சுமிழ் நாகம் கிடந்த * நற்பொய்கை புக்கு *
அஞ்சப் பணத்தின் மேல் * பாய்ந்திட்டருள் செய்த *
அஞ்சன வண்ணனைப் பாடிப் பற *
அசோதை தன் சிங்கத்தைப் பாடிப் பற 5

முடி ஒன்றி * மூவுலகங்களும் ஆண்டு * உன்
அடியேற்கருள் என்று * அவன் பின் தொடர்ந்த **
படியில் குணத்துப் * பரத நம்பிக்கு * அன்று
அடி நிலை ஈந்தானைப் பாடிப் பற *
அயோத்தியர் கோமானைப் பாடிப் பற 6

காளியன் பொய்கை * கலங்கப் பாய்ந்திட்டு * அவன்
நீள் முடி ஐந்திலும் * நின்று நடம் செய்து **
மீள அவனுக்கு * அருள் செய்த வித்தகன் *
தோள் வலி வீரமே பாடிப் பற *
தூமணிவண்ணனைப் பாடிப் பற 7

தார்க்கு இளந்தம்பிக்கு * அரசீந்து * தண்டகம்
நூற்றவள் சொல் கொண்டு போகி * நுடங்கிடை **
சூர்ப்பணகாவைச் * செவியொடு மூக்கு * அவள்
ஆர்க்க அரிந்தானைப் பாடிப் பற *
அயோத்திக்கு அரசனைப் பாடிப் பற 8

மாயச் சகடம் உதைத்து * மருதிறுத்து *
ஆயர்களோடு போய் * ஆநிரை காத்து ** அணி
வேயின் குழல் ஊதி * வித்தகனாய் நின்ற *
ஆயர்கள் ஏற்றினைப் பாடிப் பற *
ஆநிரை மேய்த்தானைப் பாடிப் பற 9

காரார் கடலை * அடைத்திட்டு இலங்கை புக்கு *
ஓராதான் பொன்முடி * ஒன்பதோடு ஒன்றையும் **
நேரா அவன் தம்பிக்கே * நீள் அரசீந்த *
ஆராவமுதனைப் பாடிப் பற *
அயோத்தியர் வேந்தனைப் பாடிப் பற 10

** நந்தன் மதலையைக் * காகுத்தனை நவின்று *
உந்தி பறந்த * ஒளியிழையார்கள் சொல் **
செந்தமிழ்த் தென்புதுவை * விட்டுசித்தன் சொல் *
ஐந்தினோடு ஐந்தும் வல்லார்க்கு * அல்லல் இல்லையே 11

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

---